

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக நடப்போம் நலம் பெறுவோம் திட்டத்தின் கீழ் 8 கி.மீ சுகாதார நடைபயிற்சியினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் புதுக்கோட்டை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கிலிருந்து சுகாதார நடைபயிற்சியினை கொடியசைத்து துவக்கி வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திருமதி. திலகவதி செந்தில், துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) மரு.ராம்கணேஷ் (புதுக்கோட்டை), மரு.நமச்சிவாயம் (அறந்தாங்கி), மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



நடப்போம் நலம் பெறுவோம் என்ற நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக நடைப்பயிற்சியை துவங்கி வைத்தார்கள். அதன் நிகழ்வாக திருப்பூர் தெற்கு மாவட்டம், காங்கேயம் தெற்கு ஒன்றியம், சிவன்மலையில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நடைப்பயிற்சியை (Health Walk) தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிருஸ்துராஜ், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனார், தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் உள்பட மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொதுமக்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் - புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில்

# கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் கவிதைகள் ஒப்பித்தல் போட்டி!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் வாழ்த்துரை!

புதுக்கோட்டை, நவ.5-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை நடத்தும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பள்ளி மாணவ - மாணவியருக்கான முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் கவிதைகள் திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி நாளை (6.11.2023, திங்கட்கிழமை) காலை 9 மணி முதல் புதுக்கோட்டை டவுன் ஹாலில், புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெறுகிறது.

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட அமைப்பாளர் செந்தாமரை பாலு வரவேற்புரையாற்றுகிறார்.

ஆ.செந்தில், அரு.வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன்,பி. ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி, ஜெ.அஸ்ரப் அலி, சிப்காட் சந்திரசேகர், பி.டி.ரவி, கே.சண்முகம் மலையூர் சத்யா, கோ.மதியழகன், கந்தர்வக்கோட்டை முருகையா, பாடகர் இளையராஜா, பாடகர் முத்து முகம்மது ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சிறப்பு அழைப்பாளராக, பார்வையாளராக கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளர், மண்டல பொறுப்பாளர் திருச்சி எழில்மாறன் செல்வேந்திரன் கலந்து கொள்கிறார்.

சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ். ரகுபதி, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள். மேலும் இந்நிகழ்வுகளில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் பெரியண்ணன் அரசு , மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், த.சந்திரசேகரன், புதுக்கோட்டை விஜயா பி.டி.அரசக்குமார், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், சுப.சரவணன், செ.அசோக்பாண்டியன், வி.என்.மணி, கே.ஆர்.என்.போஸ், கீரை. தமிழ்ராஜா, சு.சண்முகம், மு.க.ராமகிருஷ்ணன் ஆர். ஆர்,சாமிநாதன், தவ.பாஞ்சாலன், வெ.முத்துகிருஷ்ணன், எம்.பரமசிவம், மா. தமிழ் அய்யா, என்.சேட்டு,

சி.சண்முகம், ஓ.எஸ். வெங்கடாசலம், கே.எஸ். சந்திரன், ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து, மு.பி.ம. சத்தியசீலன், கே.பி.அய்யப்பன், அ.இளங்குமரன், திலகவதி செந்தில், ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், பெ.சின்னையா, காமு மு.பி.மணி, மாலா ராஜேந்திரதுரை, உ.முருகேசன், ஜெயமீரா ரவிக்குமார், சகுந்தலா வைரவன், தென்னலூர் எம். பழனியப்பன், எம்.செந்தில் குமார், என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், ஆர்.செல்லத்துரை , சி.ஆர், வி.சித்ரா, உரக்கடை எம்.கருப்பையா, மஜீத் முபாரக், எம்.சுப்பையா, டாக்டர் செ.குறிஞ்சிவாணன், டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, வே.ராஜேஷ், ச.இளையசூரியன், டாக்டர் மு.க. முத்துக்கருப்பன், என். வீரய்யா, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், வி.என்.எம்.பாலமுருகன், பொன்.பாரிவள்ளல், டி.சூசைராஜ், எம். ராஜா, க.கவிவேந்தன், எஸ். வி.ஆர்.ஸ்டாலின், தவசுமணி, அ.பிரபா, ஆர்.டி. ராமசாமி,கே.கணபதி, அ. ரெத்தினம், எம்.வேலுச்சாமி, இராம.செல்வராஜ், ஜெ.அஸ்ரப் அலி, சி.அரங்கநாயகம், டி.சி.ஆர்.ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

முடிவில் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட துணைத் தலைவர் கி.சுப்பிரமணியன் நன்றி கூறுகிறார்.

### வேளாண்மைத் துறையில் டி.என்.பி.எஸ்.சி. மூலம் தேர்வு செய்யப்பட்ட

# 213 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வழங்கினார்!

சென்னை, நவ.4-

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே. பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் (03.11.2023) வேளாண்மை ஆணையரகத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 213 தெரிவாளர்களில் 30 சுருக்கெழுத்து தட்டச்சர் (தரம் 3) மற்றும் 183 தட்டச்சர்களுக்கு பணி நியமன ஆணையையும், 2021-2022 ஆண்டில் மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டியில் அதிக மகசூல் பெற்ற 18 விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கியும், பூச்சிக்கொல்லி அமலாக்க மேலாண்மை தகவல் இணையதளத்தை தொடங்கியும் வைத்தார்.

தமிழ்நாடு அரசு, விவசாயிகளின் நலனிற்காக பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, இத்திட்டங்கள் விவசாயிகளை சென்றடைவதற்கு போதிய தொழில்நுட்ப அலுவலர்களையும், நிர்வாகப் பணியாளர்களையும் நியமனம் செய்து வருகிறது. அந்த வகையில் 30 சுருக்கெழுத்துத் தட்டச்சர் (தரம்3) மற்றும் 183 தட்டச்சர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

விவசாயிகள், வேளாண்மை உழவர் நலத்துறை வழங்கி வரும் தொழில்நுட்பங்களை சரிவர கடைப்பிடித்து, அதிக மகசூல் பெறுவதை ஊக்குவிப்பதற்கு பயிர் விளைச்சல் போட்டியை நடத்தி வருகின்றது.

2021-22ஆம் ஆண்டு நிலக்கடலை, பருத்தி, கரும்பு, மக்காச்சோளம், சோளம், கம்பு, துவரை, பச்சைப்பயிறு, மற்றும் உளுந்து பயிர்களில் மாநில அளவில் முதல் மற்றும் இரண்டாம் பரிசு பெற்ற 18 விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

பூச்சிக்கொல்லி மருந்து உற்பத்தி ஆலைகள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து விற்பனை நிலையங்களுக்கு உரிமங்களை எளிய முறையில் இணைய தளம் மூலம் பெறுவதற்கு, பூச்சிக்கொல்லி உற்பத்தி மற்றும் விற்பனை உரிமம் மேலாண்மை இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், நீண்ட இழைப் பருத்தி சாகுபடி பரப்பினை அதிகரித்து விவசாயிகளுக்கு அதிக இலாபம் கிடைத்திடவும் தமிழ்நாட்டில் உள்ள நூற்பாலைகளுக்குத் தேவையான தரமான பருத்திப் பொதிகளை கிடைத்திடவும் தென்னிந்திய நூற்பாலைகள் அசோசியேசன் (SIMA) மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தின் விஞ்ஞானிகள் வேளாண் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஒரு கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டு தமிழ்நாட்டின் பருத்தி சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியினை அதிகரித்திட உரிய கருத்துரு அரசுக்கு அனுப்பிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து வரும் நிலையில், விவசாயிகள் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் சம்பா நெல் மற்றும் இதர பயிர்கள் நவம்பர் 15 ஆம் தேதிக்குள் காப்பீடு செய்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் சில மாவட்டங்களில் மழைப் பொழிவு குறைவாக உள்ள நிலையில் விவசாயிகள் விதைப்பு மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. இவ்விவசாயிகளும் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்து கொள்வதன் மூலம் விதைப்பு செய்ய இயலாமை என்னும் இடர் நிகழ்வின் கீழ் இழப்பீட்டு தொகை பெற இயலும்.

இவ்விழாவில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச்செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மை ஆணையர் முனைவர் இல. சுப்பிரமணியன், வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணி மேலாண்மை), திருமதி. ஸ்ரேயா பி.சிங், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஆர். முருகேசன் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஏற்படுத்திட அனுமதி வழங்குமாறு மும்பை நபார்டு வங்கி முதன்மை பொது மேலாளர் சுதிர் ராயை நேரில் சந்தித்து நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கடிதம் வழங்கினார்.

# நாமக்கல் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஏற்படுத்திட அனுமதி வழங்குக!

## மும்பை நபார்டு வங்கியில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கோரிக்கை!

நாமக்கல், நவ.5-

நாமக்கல் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஏற்படுத்திட அனுமதி வழங்க வேண்டும் என மும்பை நபார்டு வங்கியில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கோரிக்கை விடுத்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஏற்படுத்திட அனுமதி வழங்குமாறு நபார்டு வங்கி மும்பை முதன்மை பொது மேலாளர் சுதிர் ராய் - ஐ சந்தித்து நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கடிதம் வழங்கியுள்ளார்.

இக்கடிதத்தில் 1996 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திலிருந்து நாமக்கல் வருவாய் மாவட்டம் பிரிக்கப்பட்டது, நாமக்கல் மாவட்டத்தில் ஏராளமான பால் பண்ணை மற்றும் கோழிப் பண்ணைகள் உள்ளன என்பதையும், இம்மாவட்டத்தில் உள்ள பெரும்பான்மையான மக்கள் மேற்கண்ட பணிகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், நாமக்கல் மாவட்டத்தில் 1000 க்கும் மேற்பட்ட பல்வேறு கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. விவசாயக் கடன் சங்கம், பால் பண்ணை சங்கம், கைத்தறி நெசவாளர் சங்கங்கள். சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு சங்கங்கள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து, 1000 கோடி ரூபாய் டெபாசிட் செய்யப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நாமக்கல் மாவட்டம் உருவாக்கப்பட்டு 25 ஆண்டுகளுக்கும் மேலாகி விட்ட நிலையில், நாமக்கல் மாவட்டத்திற்கென தனியாக மத்திய கூட்டுறவு வங்கி இல்லை.

தற்போது, நாமக்கல் மாவட்டத்திற்கு புதிய மத்திய கூட்டுறவு வங்கி தொடங்குவதற்கான சாத்தியக்கூறு ஆய்வுக்காக தமிழக அரசு, கூட்டுறவு சங்கப் பதிவாளர் குழுவை அமைத்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கண்ட குழுவில் நபார்டு வங்கியின் பிரதிநிதியும் உறுப்பினராக உள்ளார். நாமக்கல் மாவட்டம் தொழில் துறையில் அதிக திறன் கொண்டதோடு, மாநிலத்தில் வேகமாக வளரும் மாவட்டமாகவும் உள்ளது.

மேலும், நாமக்கல் மாவட்டத்திற்கான இங்கு செயல்படும் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி போல் முழுத் திறனுடன் புதிதாக தொடங்கப்படும் மத்திய கூட்டுறவு வங்கியும் ஸ்திரமாகச் செயல்படும்.

தற்போது, இந்திய அரசின் கூட்டுறவு அமைச்சகம், வணிகர்கள், சிறு வணிகர்கள் மற்றும் விவசாயி களை மேம்படுத்துவதற்காக நாடு முழுவதும் புதிய கூட்டுறவு சங்கங்கள்/வங்கிகள் நிறுவப் படும் என்று புதிய கொள்கையை உருவாக்கியுள்ளது.

இந்த தருணத்தில். தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்திற்கு தனியாக ஒரு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை நிறுவுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என அம்மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வண்ணை தேவகி

### நவம்பர் 5 (2009)



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது கொள்கைப் பற்றாலும், பேச்சாற்றலாலும் தன்னலம் கருதாத் தியாகத்தாலும் ஈர்க்கப்பட்டு, இளம் வயதிலேயே கழக மேடைகளில் உரையாற்றியவர்.

கழகம் நடத்திய போராட்டங்களில் எல்லாம் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

கழக மகளிர் அணியின் செயலாளராகவும், துணைத் தலைவராகவும், இணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து வந்தவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநகராட்சி சுகாதாரநிலைக்குழுவின் தலைவராக திறம்பட பணியாற்றியவர்.

முதல்வர் கலைஞர் அவர்கள் 1999ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் 'அம்பேத்கர் விருது' வழங்கி சிறப்பித்தார்.

"கழகம், கழகம் என்று தன் வாழ்நாள் முழுவதையும் கழகத்திற்காகவே செலவழித்து, அவர் பேசாத கிராமங்களே இல்லையென்ற அளவிற்கு, கழகப் பிரச்சாரத்தில் தன் இளம் பிராயத்திலிருந்து ஈடுபட்டவர்" என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு. சுலைமான்

### நவம்பர் 5 (1983)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

கோவை மாவட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

நெருக்கடி காலத்தில் மிசா சட்டம் அமல்படுத்தப்பட்ட போதும், தைரியமாக முரசொலி முகவராக பணியாற்றியவர்.

கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனராக பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**